Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 714/2023 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | பிரதீப் |
| Father's Name | – | ராமச்சந்திரன் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 10th January 2024.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A1, A2 present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது குஞ்சிபாளையத்தில் தாடகை நாச்சியம்மன் கோவில் வீதியில் குடியிருந்து கொண்டு கார் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். அசா.1 எனது மனைவி. 18.08.2023 ம் தேதி இரவு 1 மணியளவில் சத்தம் கேட்டு எழுந்து மின் விளக்கை போட்டு நான் வீட்டின் முன் கதவைத் திறந்து பார்த்தேன். எனது மனைவி வீட்டின் பின் கதவைத் திறந்து பார்த்தார். நான் சென்று பார்த்தபோது எனது மனைவியின் கழுத்தில் இருந்த செயினை கத்தியைக் காட்டி மிரட்டி பறித்துவிட்டு ஓடி விட்டார்கள். மேற்படி தங்கச் சங்கிலி 6 பவுன் எடைகொண்டது. நாங்கள் சத்தம் போட்டோம். அருகில் இருந்த வீட்டுக்காரர்கள் வந்து ½ மணி நேரம் தேடிப்பார்த்தோம். பின்பு அருகில் சத்தம் கேட்டது. அங்கு சென்று பார்த்தபோது இரண்டுநபர்கள் கிணற்றினுள் இருந்தார்கள்.

அதில் ஒருவர் மேலே ஏறிவந்தார். பொது மக்கள் அவரைப் பிடித்துக் கொண்டார்கள். ஒருவர் கிணற்றினுள்தான் இருந்தார். பின்னர் தீயணைப்பு படை வந்து மற்றொரு நபரையும் கிணற்றினுள் இருந்து மேலே ஏற்றினார்கள். ஆஜர் எதிரிகள்தான் என் மனைவியின் நகையைப் பறித்துச்சென்று கிணற்றில் இருந்து பொதுமக்களால் பிடிக்கப்பட்ட நபர்கள் ஆவார்கள். பின்னர் நாங்கள் எதிரிகளை காவல்நிலையத்தில் ஒப்படைத்தோம். இது சம்பந்தமாக என் மனைவி புகார் அளித்தார். மேற்படி தங்கச் செயினை போலிசார் படிவம் 91 ன் மூலம் கைப்பற்றியபோது நானும் என் மனைவியும் சாட்சிகளாக கையொப்பம் இட்டோம். அதில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது. அந்த 2 வது கையொப்பம் **அசாஆ.5** ஆகும். என் மனைவியை மிரட்ட பயன்படுத்திய கத்தியையும் என் மனைவியிடம் இருந்து பறித்த நகையையும் தற்போது என்னால் அடையாளம் காட்ட முடியும். அசாஆ.3 புகைப்படத்தில் உள்ள நகைகள் தான் எதிரிகளால் என் மனைவியிடம் இருந்து பறிக்கப்பட்டதாகும். அசாஆ.4 புகைப்படத்தில் உள்ள அறுவாள் கத்தியைக் காட்டிதான் எதிரிகள் என் மனைவியிடம் இருந்து நகையை பறித்துக்கொண்டார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் வீட்டில் எந்த பக்கத்தில் இருந்துசத்தம் கேட்டது என்றால் பின்பக்கத்தில் இருந்து சத்தம் கேட்டது. மேற்படி சத்தம் சாதாரண சத்தமா என்றால் அதிக சத்தத்தோடு இருந்தது. சத்தம் கேட்டவுடன் நான் முன் பக்க கதவைத் திறக்கச் சென்றேன். எனது மனைவி பின் பக்கம் கதவினை திறக்கச் சென்றார். அப்போது ஐயோ என்று சத்தம் கேட்டது. அப்போது நான் பார்த்தபோது அறுவாள் கத்தியைக் காட்டி எதிரிகள் என் மனைவியிடம் இருந்து நகையை பறித்துக்கொண்டு என்னைப் பார்த்தவுடன் ஓடிவிட்டார்கள்.

எதிரிகள் ஓடும்போது நான் அவர்களது முகத்தைப் பார்த்தேனா என்றால் பார்த்தேன். சம்பவ சமயத்தில் எதிரிகள் என்ன நிற உடை அணிந்திருந்தார்கள் என்றால் காவிக்கலர் லுங்கி அணிந்திருந்தார்கள். தப்பி ஓடியபோது காவல்நிலையத்திற்கு தகவல் கொடுத்தேனா என்றால் பொது ஜனங்கள் அனைவரும் தேடிக்கொண்டிருந்தார்கள். மறு நாள் காலை காவல்நிலையம் சென்று புகார் அளித்தோம். சம்பவம் நடக்கும்போது அவசர எண்.100 க்கு அலைபேசி மூலம் அழைக்கலாம் என்பது பற்றி எனக்குத் தெரியுமா என்றால் தெரிந்திருந்தாலும் பதட்டத்தில் நான் அழைக்கவில்லை.

எதிரிகள் எங்கள் வீட்டின் பின்னால் இருந்து கிழக்குப்புறமாக ஓடினார்கள். கிணற்றினுள் இருந்து மேலே வந்த எதிரியை பொதுமக்கள்தான் முதலில் பார்த்தார்கள். கிணற்றிற்கு அருகில் மின் விளக்குகள் இருந்தனவா என்றால் நான் கவனிக்கவில்லை, ஆனார் மொபைல் லைட் அடித்து அனைவரும் பார்த்தார்கள். கிணற்றினுள் இருந்து வந்த நபர்களைதான் காவல்நிலையத்தில் ஒப்படைத்தோம் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் காவல் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வரவில்லை. மறு நாள் காலை சுமார் 8 மணியளவில் காவல்நிலையத்திற்கு நானும் என் மனைவி மற்றும் பொதுமக்கள் 2 பேர் சென்றோம்.

முதல் தகவலறிக்கையின் நகலை எப்போது கொடுத்தார்கள் என்றால் 19ம் தேதி கொடுத்தார்கள். எனக்கு தமிழ் எழுதப் படிக்கத் தெரியுமா என்றால் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். நான் மலையாளம் மொழியில் பயின்றேன். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் கொடுத்த அன்றே போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் சுமார் 2, 3 முறை விசாரித்தார்கள். சரியாக ஞாபகம் இல்லை.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எங்கள் வீட்டின் பின்பக்கம் இருந்து சத்தம் கேட்டது. அதன் திசை கிழக்கு ஆகும். சத்தம் கேட்டவுடன் நாங்கள் 2 பேரும் எழுந்து சென்றுபார்த்தோம். என் மனைவி அப்போது ஐயோ என்று சத்தம் போட்டார். நான் பார்த்தபோது அறுவாள் கத்தியைக் காட்டி எதிரிகள் என் மனைவியிடம் இருந்து நகையை பறித்துக்கொண்டு என்னைப் பார்த்தவுடன் ஓடிவிட்டார்கள். நானும் சத்தம் போட்டேன். ஊர்க்காரர்கள் வந்தார்கள். நாங்கள் அனைவரும் சென்று தேடிப்பார்த்தோம்.

½ மணி நேரம் கழித்து எதிரிகள் கிணற்றினுள் இருக்கிறார்கள் என தகவல் கிடைத்தது. நாங்கள் சென்று பார்த்தோம். சம்பவ இடத்திற்கு நான், என் மனைவி, நிறைய நபர்கள் சென்றோம். பெயர்களைத் தற்போது என்னால் குறிப்பிட்டுக் கூற இயலாது. நான் சென்றுபார்க்கும்போது ஒருவரை மேலே எடுத்துக்கொண்டிருந்தார்கள், மற்றொருவர் கிணற்றினுள்தான் இருந்தார். இருவரில் மேலே இருந்தவர் ஹரிஷ் என்ற எதிரி ஆவார்.

ஹரிஷ் என்று போலிசார் விசாரணையில் தெரியவந்தது. நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அறுவாளைக் காட்டிதான் என் மனைவியை மிரட்டினார்-

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam.,B.A.B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 714/2023 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | நந்தகோபால் |
| Father's Name | – | சுந்தரம் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 10th January 2024.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A1, A2 present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது குஞ்சிபாளையத்தில் தாடகை நாச்சியம்மன் கோவில் வீதியில் குடியிருந்து கொண்டு நெசவுத் தொழில் செய்து வருகிறேன். அசா.1 மற்றும் 2 ஆகியோர் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்கள்.19.08.2023 ம் தேதி அதிகாலை 1, 1.15 மணியளவில் திருடன் காப்பாற்றுங்கள் எனச் சத்தம் கேட்டது. நான் சென்றுபார்த்தபோது அவர்கள் இருவரும் ஓடிவிட்டார்கள். நாங்கள் மறுபடியும் சத்தம் போட்டோம். அருகில் உள்ள வீட்டுக்காரர்கள் வந்தார்கள், நாங்கள் சென்று தேடிப்பார்த்தோம். பக்கத்தில் செந்தில் என்பவர் தோட்டத்தில் உள்ள கிணற்றில் 2 நபர்கள் விழுந்துவிட்டார்கள் என சத்தம் கேட்டது.

அருகில் இருந்த பக்கத்து தோட்டத்துக்காரர்கள் வந்துவிட்டார்கள். நாங்கள் அனைவரும் சென்றுபார்த்தோம். அப்போது ஒரு நபரை பிடித்துவிட்டார்கள், மற்றொருவர் கிணற்றினுள் இருந்தார். அவரை மீட்க தீயணைப்பு படையினர் வந்து மீட்டார்கள். அசா.1 மற்றும் அசா.2 கிணற்றினுள் இருந்து வந்தவர்கள்தான் எங்கள் வீட்டில் வந்து நகையைப் பறித்துச் சென்றவர்கள் எனக் கூறினார்கள்-ஆஜர் எதிரிகள்தான் மேற்படி நபர்கள் ஆவார்கள். பின்னர் இருவரையும் காலை 8 மணியளவில் காவல்நிலையத்தில் ஒப்படைக்கலாம் என்று அசா.2 தன்னுடைய காரில் எதிரிகளையும் நாங்கள் தனிக்காரிலும் காவல்நிலையம் சென்று எதிரிகளை ஒப்படைத்தோம்.

பின்னர் அசா.1 சம்பவம் குறித்து போலிசாரிடம் புகார் அளித்தார். நாங்கள் காவல்நிலையத்திற்கு வெளியே இருந்தோம். பின்பு 11 மணியளவில் உதவி ஆய்வார் என்னையும் ஜெயக்குமாரையும் அழைத்தார். எதிரிகள் எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதில் ஆஜர் எதிரி ரமேஷ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் பல இடத்தில் திருடியதாகவும் எங்கள் ஊருக்கு ரயில்வே தண்டவாளம் வழியாக நடந்து வந்ததாகவும் மேற்படி சம்பவத்திற்கு உபயோகப்படுத்திய கத்தியை செந்தில் அவர்களின் தோட்டத்தில் மறைத்து வைத்திருப்பதாகவும் அழைத்துச் சென்றால் எடுத்து ஒப்படைப்பதாகவும் 1 ம் எதிரி தெரிவித்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.

மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் ஜெயக்குமாரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அதில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அசாஆ.6** ஆகும். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். அது **அசாஆ.7** ஆகும். பின்னர் எங்களையும் எதிரிகளையும் போலிசார் அழைத்துக்கொண்டு தோட்டத்திற்குச் சென்றனர். மேற்படி செந்தில் அவர்களின் தோட்டத்தில் 1ம் எதிரி தான் மறைத்து வைத்திருந்த அறுவாளை எடுத்து ஒப்படைத்தார். தற்போது என்னிடம் காட்டப்படும்

அசாஆ.4 ல் உள்ள அறுவாள்தான் அது. அங்கேயே போலிசார் அறுவாள் கைப்பற்றப்பட்டதற்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் ஜெயக்குமாரும் சாட்சிகளாக கையொப்பம் இட்டோம். அதில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் **அசாஆ.8** ஆகும். மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் முதலாவதாக ஜெயக்குமார் என்பவர் கையொப்பம் இட்டார்.

பின்னர் சம்பவ இடத்திலேயே ஹரிஷ் என்பவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதில் தான் திருட உபயோகப்படுத்திய TN 58 9751 Bajaj CT 100 என்ற வாகனத்தை சின்ன பள்ளிவாசல், சந்தைப்பேட்டை, பொள்ளாச்சியில் மறைத்து வைத்திருப்பதாகவும் அழைத்துச் சென்றால் எடுத்து ஒப்படைப்பதாகவும் தெரிவித்ததை அடுத்து போலிசார் மேற்படி இடத்திற்கு எங்களையும் எதிரிகளையும் அழைத்துச் சென்றனர். மேற்படி இடத்தில் மேற்படி வாகனத்தை போலிசார் கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றியபோது நான் 2 வதாக சாட்சி கையொப்பம் செய்தேன். 2 ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அசாஆ. 9** ஆகும். அதில் உள்ள 2 வது கையொப்பம் **அசாஆ. 10** ஆகும். அதில் முதலாவது கையொப்பம் ஜெயக்குமாருடையது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது, அது **அசாஆ.11** ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில்(5 எண்ணிக்கை) உள்ள வாகனம்தான் எதிரி 2 அடையாளம் காட்ட போலிசாரால் கைப்பற்றப்பட்டது. மேற்படி புகைப்படம் **அசாஆ.12** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**1 மற்றும் 2 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1.15 மணியளவில் சத்தம் கேட்டு எழுந்துவந்தேன். அப்போது அசா.1 மற்றும் அசா.2 வெளியே நின்றுகொண்டிருந்தார்கள். கதவின் பூட்டை உடைத்த சத்தம் கேட்டு பார்த்தபோதுதான் ஆஜர் எதிரிகள் திருடிய விபரம் தெரியும் என அவர்கள் கூறினார்கள் என்றால் சரிதான். நான் , ஜெயக்குமார், தியாகராஜன், முத்துக்குமார், அசா.1, அசா.2 மற்றும் சிலர் சுமார் 10 நபர்கள் பக்கம் ஓடித் தேடிப்பார்த்தோம் என்றால் சரிதான். பக்கத்து தோட்டத்தில் தேடிப்பார்த்தோம். கிழக்கு நோக்கிதான் எதிரிகள் ஓடினார்கள். அந்தப்புறம்தான் தேடிப்பார்த்தோம்.

½ கி.மீ தூரம் சென்று தேடிப்பார்த்தோம். எதிரிகள் பின்னாலேயே ஓடிச்சென்று பார்க்கவில்லை, அவர்கள் சென்றபின்புதான் நாங்கள் சென்று தேடிப்பார்த்தோம். பின்னர் சிறிது நேரம் கழித்து செந்தில் என்பவரது தோட்டத்தில் உள்ள கிணற்றில் யாரோ விழுந்துவிட்டார்கள் என சத்தம் கேட்டது. நாங்கள் சென்றுபார்த்தோம். அப்போது ஒரு நபர் கிணற்றினுள் இருந்து மேலே வந்தவரை பிடித்துவிட்டார்கள். மற்றொரு நபர் கிணற்றினுள் இருந்தார். தீயணைப்பு படை வீரர்கள் வந்து மீட்டார்கள். தீயணைப்பு படைக்கு தோட்டத்துக்காரர் செந்தில் தகவல் கூறினார்.

சம்பவத்திற்கு பின்னிட்டு காலை 8 மணியளவில் காவல்நிலையத்திற்குச் சென்று எதிரிகளை ஒப்படைத்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் நான்தான் கையொப்பம் இட்டேன். எதிரிகள் இருவரும் சொன்னதை போலிசார் தட்டச்சு செய்துவைத்திருந்தனர். அதில் நாங்கள் கையொப்பம் இட்டோம் என்றால் சரியல்ல, எங்கள் முன்னிலையில்தான் எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள், அவர் சொல்லச் சொல்ல தட்டச்சு செய்தார்கள். அதில் நான் கையொப்பம் இட்டேன், என்னுடன் ஜெயக்குமார் என்பவர் கையொப்பம் இட்டார்.

ஒப்புதல் வாக்குமூலத்தில் பல இடத்தில் திருடியிருப்பதாகக் கூறினார்கள், குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றி எதுவும் கூறவில்லை. அசா.1 எதிரிகள் கத்தியைக் காட்டி மிரட்டி நகையைப் பறித்துச் சென்றதாக கூறினார் என்றால் சரிதான், ஆனால் அதை நான் பார்க்கவில்லை. முதலில் ஹரிஷைப் பிடித்தார்கள், காவல்நிலையத்தில் விசாரிக்கும்போதுதான் பெயர் தெரியும். தங்கச் சங்கிலியில் பாதி அசா.1 இடம் இருந்தது, பாதி எதிரிகளிடம் இருந்தது. எதிரிகளை செந்தில் தோட்டத்திற்கு அழைத்துச் செல்லும்போது மதியம் 12.30 மணியிருக்கும். எதிரிகள் வாழை மரத்தில் சொருகி மறைத்துவைத்திருந்த அறுவாளை எடுத்துக்கொடுத்தார்கள்.

பின்பு அங்கிருந்து பள்ளிவாசலுக்குச் சென்று இரு சக்கர வாகனத்தைக் கைப்பற்றினார்கள். அங்குச் சென்றோம். சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் நான் போலிசாரின் கையிருப்பு சாட்சி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தை மடிகணிணியில் வைத்து தட்டச்சு செய்தார்கள் என்றால் சரிதான். ரமேஷ்டம் இருந்து முதலில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. சுமார் ½ மணிநேரம் பதிவு செய்தார்.

2 ம் எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் தோட்டத்தில் வைத்துப் பெறப்பட்டது. அவர்தான் இரு சக்கர வாகனம் மசூதியின் அருகே இருப்பதாகக் கூறினார். அவரிடம் இருந்தும் ஒப்புதல் வாக்குமூலம் பெற ½ மணி நேரமானது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை கையில்தான் எழுதினார். ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தபோது நானும் ஜெயக்குமார் இருந்தோம். அசா.1 இருந்தார். 2 வது எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது சுமார் மதியம் 12 மணியிருக்கும். இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam.,B.A.B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.